## தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

I.D.No.13/2021 தேதி :30.03.2022

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திருமதி.V.பானுமதி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2022 ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானசேகர் | சாட்சியம் | : | WW1 |
| தந்தை பெயர் | : | தாமோதரன் | தொழில் | : | |
| வயது | : | 41 | இனம் | : | ஆண் |
| நேரம் | : | 11:36 a.m. to 11:45 a.m. | கிராமம் | : | காஞ்சிபுரம். |

**தொ.த.சா.1 திரு.ஞானசேகர் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது.**

நான் மனுதாரர். முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி.

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நான் பிட்டராக பணி செய்தேன். 05.10.2004ம் தேதியில் பணியில் சேர்ந்தேன். கடைசியாக நான் வாங்கிய மாத ஊதியம் ரூ.20,000/=. 02.03.2019ம் தேதியில் என்னை வாய்மொழியாக வேலை நீக்கம் செய்தார்கள். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நான் பணி செய்த போது எனக்கு கொடுக்கப்பட்ட அடையாள அட்டை நகல் தொ.த.சா.ஆ.1. 15.07.2019 தேதியில் நிர்வாகத்திற்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.2. (இந்த அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை தாக்கல் செய்யவில்லை என்பதால் குறியீடு செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது, ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). 06.03.2015 தேதியிட்டு நிர்வாகம் வழங்கிய சான்று நகல் தொ.த.சா.ஆ.3. 24.12.2019 தேதியிட்டு சமரச அலுவலர் முன்பு

/ /

தாக்கல் செய்த மனுவின் நகல் தொ.த.சா.ஆ.4. 27.10.2020 தேதியிட்டு சமரச அலுவலர் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அனுப்பிய கடித நகல் தொ.த.சா.ஆ.5. 21.12.2020 தேதியிட்டு சமரச அலுவலர் வழங்கிய சமரச முறிவு அறிக்கை நகல் தொ.த.சா.ஆ.6. 2018 செப்டம்பர் மாதத்திற்கான என்னுடைய சம்பள ஸ்லிப் நகல் தொ.த.சா.ஆ.7. மனுப்படி உத்தரவாக கோருகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Presiding Officer,
Labour Court, Kancheepuram.